සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

## இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2016 (2017)

## First Efficiency Bar Examination for the Officers in Sri Lanka Animal Production and Health Service - 2016 (2017)

**(01) நிதி முறைமைகள்**
Financial Systems

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

**நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை தருக. எல்லா வினாக்களுக்கும் **சமமான** புள்ளிகள் வழங்கப்படும்.

1. (i) நிதி அமைச்சரினால் வழங்கப்படும் **ஐந்து** வகையான ஆணைச்சீட்டுக்களைப் பெயரிட்டு, அவை ஒவ்வொன்றின் நோக்கங்களையும் குறிப்பிடுக.
   (ii) நிதி ஒழுங்கு விதிகளில் குறிப்பிட்டவாறு, ஜனாதிபதியினால் திரட்டுநிதியிலிருந்து பணத்தினை விடுவிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ள **இரண்டு** சந்தர்ப்பங்களை சுருக்கமாக விளக்குக.

2. (i) நிதி ஒழுங்குவிதிகளுக்கேற்ப கொடுப்பனவு செய்யப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் தொடர்பாக திணைக்களம் ஒன்றின் கணக்குக் கிளையினால் எடுக்கப்படவேண்டிய படிமுறைகள் எவை?
   (ii) கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அல்லது உத்தியோகத்தர் ஒருவருக்கு அதற்கான அதிகாரத்தினை வழங்கும் போது, கணக்காய்வாளர் அதிபதியினால் பயன்படுத்தக்கூடிய அதிகாரங்கள் எவை?

3. அரச திணைக்களமொன்றிலே நி.பி.137 இன் கீழ் உறுதிச்சீட்டுக்களை அனுமதிப்பதற்கு (approving) அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவராக உம்மால் எவ்வாறான விடயங்களில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பொறுப்பாக இருக்கமுடியும்?

4. (i) அரசாங்க கணக்கொன்றுக்காக எழுதப்படும் காசோலையில் இரண்டாம் கையொப்பமிடுபவர் எவ்வாறான விடயங்களில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பொறுப்பாகவிருப்பார்?
   (ii) அரச கொள்ளல் வழிகாட்டியின்படி, பொருட்கள் மற்றும் சேவைகளைப் போன்று நிர்மாண வேலைகளின் பொருட்டு கொள்ளல்களின் போது பயன்படுத்தக்கூடிய **ஐந்து** கொள்ளல் முறைகளைக் குறிப்பிடுக.

5. (i) கணக்கீட்டு உத்தியோகத்தர் ஒருவரால் உபகட்டுநிதி வழங்கப்படும் சந்தர்ப்பங்களை சுருக்கமாக விளக்குக.
   (ii) அரச கடமைகளை மேற்கொள்ளும் கணக்கீட்டு உத்தியோகத்தரிடமிருந்து நி.பி. 128 இன் படி அரசாங்கம் எதிர்பார்க்கும் பண்புகள் எவை?

6. கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புக்களில் **ஐந்திற்கு** சிறுகுறிப்பு எழுதுக.
   (i) கேள்வி பாதுகாப்பு பிணை
   (ii) களஞ்சிய காப்பாளர்
   (iii) திரட்டு நிதியம்
   (iv) ஒதுக்கீட்டுக் கணக்கு
   (v) இருப்பு பொருட்களின் ஆண்டு சுற்றாய்வு
   (vi) மீண்டுவரும் செலவினம்

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව - සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான**
**முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2016 (2017)**
First Efficiency Bar Examination for the Officers in Sri Lanka
Animal Production and Health Service - 2016 (2017)

**(02)** நிர்வாகம்
Administration

**இரண்டு மணித்தியாலங்கள்**
Two hours

**ஒவ்வொரு** பகுதியிலிருந்தும் **இரண்டு** வினாக்கள் வீதம் தேர்ந்தெடுத்து **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. எல்லா வினாக்களுக்கும் **சமமான** புள்ளிகள் வழங்கப்படும்.

## பகுதி I

**1.** (i) பஞ்சவித எண்ணக்கருவினை அரச அலுவலகங்களில் செயற்படுத்துவதன் வாயிலாக அவ்வலுவலகங்களின் உற்பத்தித் திறனுக்கு ஏற்படும் தாக்கத்தினை விளக்குக.

(ii) உற்பத்தித் திறன் விருத்தி வட்டம் என்பது யாதென அறிமுகப்படுத்தி அவ்வட்டத்தின் மூலமாக நிர்வாகத்துக்குக் கிடைக்கும் பயன்கள் எவை என ஒவ்வொன்றாகக் குறிப்பிடுக.

**2.** வரிசை ஒழுங்கமைப்பு என்பது யாதென விளக்கி அவ்வாறான ஒழுங்கமைப்பு முறையினை அரச அலுவலகமொன்றில் ஈடுபடுத்துவதன் வாயிலாகக் கிடைக்கக்கூடிய நன்மைகள் மற்றும் தீமைகள் எவையெனக் குறிப்பிடுக.

**3.** பின்வரும் விடயங்களை சுருக்கமாக தெளிவுபடுத்துக.

(i) நினைவூட்டல் தினக்குறிப்பேடு

(ii) அமைப்பு அட்டவணை (வரைபடம்)

(iii) அசைவு அட்டை

(iv) விடயக் கோப்பு

(v) திறந்த தளக் கோலம்

## பகுதி II

**4.** நடைமுறை விதிகளுக்கேற்ப பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(i) அரச சேவை ஆணைக்குழுவினால் கையளிக்கப்பட்ட தத்துவத்தைக் கொண்டு செயற்படும் அதிகாரிகளினால் செய்யப்படக் கூடிய நியமிப்புக்கள் யாவை?

(ii) நியமிப்புக்களின் போது ஏற்புடைத்தான நியமங்களும் நிபந்தனைகளும் யாவை?

**5.** (i) சலுகையாக அரச அலுவலருக்குக் கிடைக்கும் அமைய மற்றும் ஓய்வு விடுப்புக்கள் சம்பந்தமாக சுருக்க விளக்கத்தினை அளிக்குக.

(ii) உத்தியோகபூர்வ ஆவணங்களின் கட்டுக்காப்பு மற்றும் அவற்றின் பாதுகாப்பும் மற்றும் அழிப்பும் என்ற விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள **அழிக்கப்படக்கூடாத** ஆவணங்கள் எவை எனக் குறிப்பிடுக.

**6.** தாபனக் கோவையின் XLVII அத்தியாயத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள பின்வரும் சந்தர்ப்பங்களினை தெளிவுபடுத்துக.

(i) பணக் கஷ்டங்கள்

(ii) பொது நடத்தை

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
[முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான
முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2016 (2017)
First Efficiency Bar Examination for the Officers in Sri Lanka
Animal Production and Health Service - 2016 (2017)

(03) திணைக்களப் பிரமாணங்கள் - I
Departmental Regulations - I

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

---

1. (i) ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து, வேறொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கு மாடுகளைக் கொண்டு செல்லும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றி விவரிக்க. *(15 புள்ளிகள்)*
   (ii) விலங்குகளைக் கொண்டு செல்வதற்கெனப் பயன்படுத்தும் வாகனத்தில், காணப்பட வேண்டிய தர நியமங்களைச் சுருக்கமாக விவரிக்க. *(10 புள்ளிகள்)*

2. பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பெழுதுக.
   (i) விலங்குகளுக்குக் குறிசுடுதல்
   (ii) விலங்குப் பாதுகாப்பு மத்திய நிலையம்
   (iii) மாடுகளுக்கான வவுச்சர்
   (iv) மாடுகளுக்கான பதிவேடு
   (v) 1988 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விலங்குச் சட்டத்தின் (திருத்தப்பட்ட) மூலமாக அரச கால்நடை வைத்தியருக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள்

   *(05 × 5 = 25 புள்ளிகள்)*

3. (i) கறவைப்பசுப் பண்ணையொன்றிலுள்ள மாடுகள், கால்வாய் நோய்க்குரிய அறிகுறிகளை வெளிக்காட்டுகின்றனவெனின், அந்தப் பண்ணை அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய கால்நடை வைத்திய அதிகாரியின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை? *(15 புள்ளிகள்)*
   (ii) மாட்டு விசர்நோயின் (Bovine spongifoarm encepholopathy) நோய்க்காரணி, இலங்கைக்கு உள்வருவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளைச் சுருக்கமாகத் தருக. *(10 புள்ளிகள்)*

4. (i) கால்நடை மருந்துகள் மற்றும் கால்நடை உயிரி உற்பத்திகள் ஆகியவற்றை இலங்கைக்கு இறக்குமதி செய்யும்போது அவற்றின் தரங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள சட்டத்தினைப் பெயரிட்டு, அதன்மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள் அல்லது அதிகாரிகள் பற்றி விளக்குக.
   (ii) 1/292 இலக்கமும் 2003.06.06 திகதியையும் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, விலங்குகளின் உணவுக்கெனப் பயன்படுத்தத் தடைசெய்யப்பட்டுள்ள நுண்ணுயிர்க் கொல்லிகளைப் பெயரிடுக.
   (iii) 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க விலங்கு உணவுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலங்கு உணவுகளில் பயன்படுத்தக்கூடிய வளர்ச்சித் தூண்டி நுண்ணுயிர்க் கொல்லிகளைப் பெயரிடுக.
   (iv) அனுமதிக்கப்பட்ட விலங்கு உணவுகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
   (v) 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க விலங்கு உணவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, நியமிக்கப்படும் அதிகாரம்பெற்ற அலுவலருக்குரிய அதிகாரங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

   *(05 × 5 = 25 புள்ளிகள்)*

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான**
**முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2016 (2017)**
First Efficiency Bar Examination for the Officers in Sri Lanka
Animal Production and Health Service - 2016 (2017)

**(04) திணைக்களப் பிரமாணங்கள் - II**
Departmental Regulations - II

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. எல்லா வினாக்களுக்கும் சமனான புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** (i) கால் - வாய் நோயைப் (Foot and Mouth disease) பற்றி விவரிக்க.

(ii) இந்த நோய் எவ்வாறு பரம்பலடையும்?

(iii) இந்த நோயை எவ்வாறு தவிர்க்கலாம் என விளக்குக.

**2.** (i) இலங்கையிலுள்ள கறவை மாடுகள், எருமைகள் ஆகியவற்றுக்கு தொடுகை மூலம் பரவும் நோய்கள் (contagious diseases) யாவை?

(ii) இந்த நோய்களின் பரம்பலைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை?

**3.** (i) 'உணவின் சுகாதாரப் பாதுகாப்பு' (food safety) என்றால் என்ன?

(ii) சுத்தமான பாலுற்பத்தி என்றால் என்னவென விளக்கி, பாரிய பண்ணைக் கறவைப்பசுப் பராமரிப்பு முறைமை (mega farm herd management system) யில், சுத்தமான பாலுற்பத்திக்கான நடைமுறைப் பிரச்சினைகளை விளக்குக.

(iii) இலங்கையின் பொதுச் சுகாதாரம் தொடர்பாக, பாலின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுத்தம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுக.

**4.** (i) 'செயற்கைமுறைச் சினைப்படுத்தல் (artificial insemination)' என்றால் என்ன?

(ii) இலங்கையின் கறவைப் பசுக்களைப் பிறப்புரிமையியல் ரீதியாக தரமுயர்த்துவதில், செயற்கைமுறைச் சினைப்படுத்தலின் பயன் யாது?

(iii) செயற்கைமுறைச் சினைப்படுத்தற் செயன்முறை தொடர்பாக, இலங்கை அரசாங்கத்தினால் இயற்றப்பட்டுள்ள சட்டங்களைப் பட்டியற்படுத்துக.

**5.** பின்வருவனவற்றுள் ஏதாவது **நான்கு** விடயங்களுக்கு சுருக்கக் குறிப்பு எழுதுக.

(i) ஆழ் குளிரூட்டப்பட்ட சுக்கிலத்தைப் (defrozen semen) பயன்படுத்தி மாடுகளைச் செயற்கை முறையில் சினைப்படுத்தல்

(ii) அங்கீகரிக்கப்பட்ட விலங்கு உணவுகள்

(iii) பொதுச் சுகாதாரத்திற்கு இறைச்சியைச் சோதிப்பதன் முக்கியத்துவம்

(iv) இலங்கையின் தேசிய பாலுற்பத்தியை அதிகரிப்பதில் எருமை மாடுகளின் முக்கியத்துவம்

(v) பாலின் தரச் சுட்டியாக உடற்கல எண்ணிக்கை (somatic cell count) யின் பயன்பாடு

* * *